# சங்கரானந்தம்-21

## 08.01.2024



காஞ்சி மஹாஸ்வாமிகளை போற்றும் பக்திப் பாடல்கள்




தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்


104, அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 126.


99404 47 437

# சங்கரானந்தம்-21

## 08.01.2024





நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும், வணங்கி உற்சவ மூர்த்தியாக நம் கண் முன்னே உலவி அருள் பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் அகம் குளிர வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹா ஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹா ஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.**

திருமதி. தனுஜா சங்கர் S.கைலாஷ்

## மஹாஸ்வாமிகளின் பேரருளால் ஜெயந்தி மற்றும் ஆராதனை நாளில் இதுவரை வெளிவந்துள்ள பாடல் தொகுப்புகள்

ௐ சங்கரானந்தம் - 01 வெளியான நாள் : 29.12.2013

ௐ சங்கரானந்தம் - 20 வெளியான நாள் : 03.06.2023

**சங்கரானந்த கானங்களை**
**www.soundcloud.com / madambakkamshanks**
மற்றும்
**www.soundcloud.com/lakshmikanthan-shankar**
ஆகிய வலைதளங்களில் கேட்டு மகிழலாம்

விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தைக் கொண்ட இப்புத்தகங்கள் மஹா ஸ்வாமிகளின் பக்தர்களுக்கு இலவசமாக தொடர்ந்து வழங்கிட தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கி குருவருள் பெறுவீர்.

குறைந்தபட்சம் ரூ.100/- அளிப்பவர்களுக்கு இப்புத்தகம் தபாலில் அனுப்பிவைக்கப்படும். தங்கள் பகுதியில் ஆன்மிக நிகழ்ச்சிகளின்பொழுது, தங்கள் இல்லத்தின் திருமணம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற விசேஷங்கள் நடைபெறும் பொழுது இப்புத்தகங்களை அச்சு விலையில் பெற்று பக்தர்களுக்கு வழங்கி மகிழ விருப்பம் உள்ளவர்கள் அணுகவும்:

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்**
104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 600 126.
**✆ 99404 47 437**
**(8.00 - 10.00 pm. only)**

சங்கரானந்த கானங்கள் வருடந்தோறும் மஹா பெரியவாளின் ஜெயந்தி மற்றும் ஆராதனையின்போது மஹாஸ்வாமிகளின் பக்தர்களுக்கு குரு அருட் பிரசாதமாக கிடைப்பதற்கு பல வகையிலும் அன்புள்ளத்தோடு பேராதரவு நல்கி வரும் அனைத்து நல் இதயங்களையும் வணங்கி மகிழ்கிறேன். அவர் தம் குடும்பத்தினர் அனைத்து வளங்களையும் நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ மஹா பெரியவாளின் பொற்பாதங்களை பணிகிறேன்.

- தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

## சங்கடங்கள் தீர்த்தருளும்
## சங்கரி புத்திரன் கானம்

(ஓடி விளையாடு பாப்பா - மெட்டு)

ஆதி கணபதி சரணம் சிவ சக்தி கணபதி சரணம்
ஞான கணபதி சரணம் மெய்ஞான குணநிதி சரணம்

சதுர்த்தி நாதனே சரணம் சங்கடஹர சதுர்த்தி நாதனே சரணம்
சதுர் வேத நாதனே சரணம் ஞான கேது நாதனே சரணம்

வேழ முகத்தனே சரணம் ஓர் ஐந்து கரத்தனே சரணம்
வேலன் மூத்தவா சரணம் ஞாலம் போற்றும் முதல்வனே சரணம்

ஏக தந்தனே சரணம் பாரதம் எழுதி தந்தவா சரணம்
யாக ப்ரியனே சரணம் சோகவிநாச காரணா சரணம்

ஜெகத்தின் முதல்வனே சரணம் ஞானப்பழம் பெற்ற புதல்வனே சரணம்
அகவல் தந்தவா சரணம் மாகயிலை சேர்ப்பவா சரணம்



Sri Mahaswami amused by a devotee's observation, Chennai – 1958

# குறைகள் தீர்த்தருளும் குரு
# காஞ்சி மாமுனி கானம்

(பிடிகிட தலம்ரால பெல்லி கூத்துரு - மெட்டு)

வரம் தர வந்தமர்ந்த வேத சங்கரா - இரு
கரம் குவித்தோர்க் கருள்புரியும் காஞ்சி சங்கரா

சுரம் எங்கும் அமர்ந்தருளும் சுந்தரேஸ்வரா - ஞானச்
சுரங்கமாய் அமர்ந்தருளும் சங்கரேஸ்வரா
சூரனையே வென்றிட்ட ஷண்முகேஸ்வரா - ஞான
சூரியனாய் அமர்ந்தருளும் காஞ்சி சங்கரா

பரம் உணர்த்த வந்தமர்ந்த மஹா ஸ்வாமியே - மன
பாரம் போக்கும் மாதவனே மஹா ஸ்வாமியே
பரந்தாம பரப்பிரம்ம   மஹா ஸ்வாமியே - ஞான
பரஞ்சோதி பசுபதியே மஹா ஸ்வாமியே

ஆரம் பாம்பு நீறணிந்த ஆதி சங்கரா - வேத
சாரம் உணர்த்த வந்திட்ட ஜோதி சங்கரா
வீரம் கல்வி செல்வமருள் சந்திர சேகரா - நெஞ்
சுரம் சேர்த்து நற்பதமருள்வீர் காஞ்சி சங்கரா



## சங்கடங்கள் தீர்த்தருளும் சங்கர குரு சரண கானம்

(அன்பில் மலர்ந்த நல் ரோஜா - மெட்டு)

கருணா ஸாகர மாமுனியே
கற்பகமே அற்புதமே
காஞ்சியில் அமர்ந்தருள் காம தேனுவே
காத்தருள்வீரே சங்கரரே

அவதார நாதரே சங்கரரே
அத்வைத குருவே சங்கரரே
ஆலடி அமர்ந்தருள் ஆதி சங்கரா
ஆறு மதம் தந்த சங்கரா

சண்முக சரவண சங்கரரே
சந்திர சேகர சங்கரரே
சாந்தமாய் அமர்ந்தருள் ஸ்வாமி நாதரே
சாத்வீக சங்கர சற்குருவே

தரணியை காத்திட வந்தவரே
தண்டம் ஏந்தியே வந்தவரே
தாய்மையோ டமர்ந்தருள் தண்ட பாணியே
தாண்டிட அருள்வீர்பவ சாகரமே



## நித்தியம் அருளும் சத்திய திரு

## சங்கர குரு கானம்

(பூவாகி காயாகி - மெட்டு)



குரு சங்கர பதம் பணிந்திடுவோம்
குறைகள் யாவும் களைந்திடுவோம்
குரு நாதர் நாமம் சொல்லி
குரு பதமே பணிந்திடுவோம் - ஜெகத்

சத்தியத்தின் திரு உருவே
சாத்வீக சற்குருவே
சித்தி அருள் சிவத்திருவே
சீர் காஞ்சி சங்கரரே


அத்வைத திரு உருவே
ஆத்தீக சற்குருவே
இத்தரணி அமர்ந்தவரே
ஈர்த்தருளும் சங்கரரே (எமை)

மத்வ வழி வந்தவரே
மாத்ரு பூதேஸ்வரரே - விஸ்வ
மித்ர சிவத் திருவே
மீளாத் துயர் தீர்ப்பவரே(என்றும்)



# ஆனந்த வாழ்வருளும் அத்வைத குரு அக்ஷர மாலை

(அன்புருவம் ஆனவரே ராகவேந்திரா - மெட்டு)



மஹா பெரியவா காஞ்சி மஹா பெரியவா
மஹா லிங்க தவரூப மஹா பெரியவா
மஹா பெரியவா காஞ்சி மஹா பெரியவா
மஹாலக்ஷ்மி ஸ்வாமி நாத மஹா பெரியவா

அஞ்சேல் என்றருள் குருவே மஹா பெரியவா
ஆதி குரு சங்கரரே மஹா பெரியவா
இமயம் முதல் குமரி வரை நடந்த சங்கரா
ஈடில்லா ஜெகத்குரு காஞ்சி சங்கரா

உமையவளின் உறுதுணையே சிவசங்கரா
ஊர்தோறும் உலாவந்த தவசங்கரா
எண் திசையும் காத்தருளும் குரு சங்கரா
ஏகம்ப நிழல் அமர்ந்த காஞ்சி சங்கரா

ஐ விரலால் அபயமருள் மஹா பெரியவா
ஒப்பில்லா சற்குருவே மஹா பெரியவா
ஓயாதமர்ந் தருள்புரியும் மஹா பெரியவா -ஆதி
ஔஷதகிரிநாதரே மஹா பெரியவா



# திருக்காஞ்சியில் அமர்ந்தருளும் திருக்கயிலை நாதர் மஹாபெரியவா கானம்

(ஸ்ரீராகம் - மெட்டு)



அனுஷத்தில் பிறந்திட்ட ஆதிரை யானே
அனுக்கிரஹம் புரிந்தே அருள்வீரே
அனுஷ நாதரே அம்மையப்பரே
அனுதினம் பணிந்திட வரம் அருள்வீரே

ஆலடி அமர்ந்தருள் அம்பல வானனே
ஆலங்காடுறை நடனேஸா
ஆலடி நிழலே எமக்கருள்வீரே
ஆலவாய் உறை பரமேஸா

மாலயன் அறியா மாமலை திருவே
காலடி பிறந்திட்ட கருணேஸா
காலடி பதித்து தடம்ஆறு தந்திட்ட
காலடி பணிந்தோம் குரு ஈஸா

ஆறு முகம்கொண்ட ஸ்வாமிநாதரே
ஆறுதலை அருள் பூமிநாதரே
ஆறு சக்கரம் உணர்த்திடுவீரே
நூறு ஆண்டுகள் வாழ்ந்திட்ட திருவே



# ஐம்பூத நாதன் ஐவிரல் அபயம் அருளும் அத்வைத குரு கானம்

(பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்  - மெட்டு)



ஐவிரல் அபயம் அருள் ஜெகத்குருவே
கைகுவித் தோர்க் கருள் காஞ்சி குருவே
மைத்ரீம் பஜத என் றருளிய குருவே
வைகாசி அனுஷத்தில் உதித்திட்ட திருவே

ஐந்தெழுத் தோதிட அருள்வீர் குருவே
பைந்தமிழ் வேதம் அருளிய திருவே
மைவிழி ஸ்வாமிநாத ஏரகத் திருவே
வைகாசி அனுஷத்தில் உதித்திட்ட திருவே

ஐம்பூதப் பொருளே அருஉரு திருவே
பைராகி போற்றிடும் பெருமலை திருவே
தைத் திங்கள் வாழ்வினில் தினமருள் குருவே
வைகாசி அனுஷத்தில் உதித்திட்ட திருவே

ஐம்புலன் அடக்கிட அருள்வீர் குருவே
பைரவ திருவே பழமலை திருவே
வைத்திய நாதரே சாத்வீக திருவே
வைகாசி அனுஷத்தில் உதித்திட்ட திருவே



# நம்பி வந்தோர்க்கருளும்நடமாடும் தெய்வம்
# காஞ்சி மஹாஸ்வாமி கானம்

(மலர்கள் நனைந்தன பனியாலே - மெட்டு)



மலர்முகம் காணவே வந்தோமே - ஞான
மலராய் இருவிழி கண்டோமே
மலர்ந்திட மனமே உணர்ந்தோமே - தாள்
மலர்களை கண்களால் பணிந்தோமே

பூமுகம் காணவே பிறந்தோமே - மனம்
பூரிக்க கவலைகள் மறந்தோமே
பூவிழி கண்டெமை மறந்தோமே - கால்கள்
பூமியில் நில்லாது பறந்தோமே

பூக்கரம் கொண்டருள் புண்ணியரே - நெஞ்சம்
பூத்திட வரமருள் சங்கரரே
பூந்தளிர் தேகமே மறவோமே - ஞானம்
பூத்திட மீண்டும் பிறவோமே

பூமியை காத்திட வந்தவரே - வேத
பூமியாய் மாற்றிய சங்கரரே
பூக்களாய் பிறந்திட அருள்வீரே - தினம்உன்
பூப்பாதம் அடைந்திட அருள்வீரே



## மஹிமை மிகு மஹாஸ்வாமி பத சரண கானம்

(முப்பத்து முக்கோடி தேவர் வணங்கும் - மெட்டு)



முப்பத்து முக்கோடி தேவர் வணங்கும்
மூப்பிலா ஆதியே சரணம்
முக்தி நகர் காஞ்சியில் வந்தமர் குருவே
மூலக் கணலே சரணம்

அடி பணிந்தோர்க்கருள் ஆலடி திருவே
ஆதி குரு நாதரே சரணம்
அடி நெஞ்சில் குடிகொண்டு அபயம்அருளும்
ஆதி சங்கரரே சரணம்

கண் மூன்று கொண்டோனின் முன்நெற்றி பாலனே
கார்த்திகை நாதனே சரணம்
கலங்கியே நின்றோர் கவலைகள் தீர்த்திடும்
காருண்ய குமரா சரணம்

சந்திர மௌலீஸ்வரா ஸ்ரீ சந்திர சேகரா
சாத்திரத் திருவே சரணம்
சங்கரானந்தமே சங்கராம்ருதமே - பவ
சாகர சாரதியே சரணம்



# ஆனந்த வாழ்வருளும் ஆதி சங்கர
# ஸ்வாமிநாத ஸ்வாமி கானம்

(சக்கனி தல்லிக்கு சாங்கு பளா - மெட்டு)


முத்தொழில் புரிந்தருள் சங்கரரே
மும்மூர்த்தி ரூபனே சங்கரரே
சங்கரரே காஞ்சி சங்கரரே



ஆலடி அமர்ந்தருள் ஆனந்த குருவே
ஆலால விஷமுண்ட சிவத் திருவே
ஆதி ஜோதியே ஆதவ திருவே
ஆதரித் தருள்குரு சங்கரரே

ஆறு முகனே முன்நெற்றி சுதனே
ஆறிரு புஜங்களால் அருள்குஹனே
ஆறிரு விழியால் அருள் வேலவனே
ஆதரித் தருள்குரு ஸ்வாமிநாதரே

ஆர்யாம்பா சுதனே காலடி சிவமே
ஆறு மதம் தந்த சங்கரரே
ஆதி பீடங்கள் ஓரைந்து தந்தவா
ஆதரித் தருள்காஞ்சி சங்கரரே



# அகிலமெங்கும் வரமருளும் அத்வைத குரு
# காஞ்சி மஹாஸ்வாமி கானம்

(முதாகராத்த மோதகம் - மெட்டு)



விழுப்புரத்தில் உதித்தவா வீடுபே றளிப்பவா
கழுபிணியை தீர்ப்பவா காபந்து புரிபவா
அழுத கண்ணுக்கருள்பவா ஆறுதலை தருபவா
முழு நிலவாய் அமர்ந்தவா காஞ்சி மஹா பெரியவா

அதிசயங்கள் புரிந்தவா ஆதிமலை சங்கரா
அருள்வடிவாய் அமர்ந்தவா ஆலடியின் சங்கரா
அச்சம் தீர்த் தருள்பவா ஆறு தலை சங்கரா
அடியார்க் கருள் புரிபவா காஞ்சி மஹா பெரியவா

அனல் உருவே ஆனவே ஆதிஜோதி சங்கரா
அசையா தமர்ந் தருள்பவா ஆதிகுரு சங்கரா
அடிமனதில் அமர்ந்தவா ஆறுமுக சங்கரா
அடியார்க் கருள் புரிபவா காஞ்சி மஹா பெரியவா

அம்பிகைக் கிடபாகமே தந்த ஆதி சங்கரா
அமரர் போற்றும் சம்புவே ஆத்மஞான சங்கரா
அகலாதென் நெஞ்சிலே ஆடி அருள் சங்கரா
அடியார்க் கருள் புரிபவா காஞ்சி மஹா பெரியவா



# பாதம் பணிந்திட நற்பதம் அருளும் காஞ்சி மஹாஸ்வாமி கானம்

(நாதஸ்வர ஓசையிலே - மெட்டு)

பாதம் பணிய அருள்வீரே வேதம் நான்கின் நாயகரே
கீதம் பாடி பணிந்திடவே நிதம் அருள்வீர் சங்கரரே



நாத வடி வானவரே நர்த்தனமே புரிபவரே
ஆதவனாய் அமர்ந்தவரே அனுஷ நாத சங்கரரே
சாதனைகள் புரிந்தவரே சத்திய வழி நடந்தவரே
வேதனைகள் தீர்ப்பவரே வைத்திய நாத சங்கரரே

மா  தவமே கொண்டவரே மன்மதனை வென்றவரே
தீதறுக்கும் தென் முகனே திசை எட்டும் காப்பவரே
போதனைகள் தந்திடவே பொற்பாதம் பதித்தவரே
சோதனைகள் கடந்திடவே வரமருளும் சங்கரரே

முதல் குருவாய் வந்தவரே மதி முகமே கொண்டவரே
மதம் ஆறு வகுத்தவரே மாந்தர் குறை தீர்த்தவரே
இதம் தந்திட பக்தருக்கே நிதம் நடந்தீர் நானிலமே
பதம் அருளும் குரு பீடம் அமர்ந்தருளும் சங்கரரே

அதர்மம் அழிக்க வந்தவரே ஸ்வாமிநாத ஸ்வாமியே
புதல்வனாயின் தந்தைக்கே பொருள் உரைத்த சரவணனே
வேத தர்மம் தழைத்திடவே காஞ்சி நகர் அமர்ந்தவரே
பாதகங்கள் போக்கி எமை ஏற்றருள்வீர் சங்கரரே



**மனக்குறைகள் தீர்த்தருளும் திருக்காஞ்சி மாமுனி கானம்**
(பிரம்ம முராரி - மெட்டு)



அழியாப் புகழ் கொண்ட ஆதி சங்கரா
அழிவிலாப் பொருளை உணர்த்திய சங்கரா
அழித்திட அதர்மமே பிறந்திட்ட சங்கரா
அழிந்திட பிறப்பே வரமருள் சங்கரா

அழியா முதலே ஆதி சங்கரா
அழிவிலா ஆதி ஜோதி சங்கரா
அழித்திட இருளே பிறந்திட்ட சங்கரா
அழிந்திட பிறப்பே வரமருள் சங்கரா

அழியா வேதமே தந்திட்ட சங்கரா
அழிவிலா பாதமே பதித்திட்ட சங்கரா
அழித்திட மடமையே பிறந்திட்ட சங்கரா
அழிந்திட பிறப்பே வரமருள் சங்கரா

அழியா அண்டமே தந்திட்ட சங்கரா
அழிவிலா கண்டமே கொண்டருள் சங்கரா
அழித்திட குரோதமே உரு கொண்ட சங்கரா
அழிந்திட பிறப்பே வரமருள் சங்கரா


சங்காரனந்த கானங்கள் தொடர்ந்து வெளிவர தங்களால் இயன்ற நன்கொடைகளை நல்கி குருவருள் பெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ரூ.100/-** அளிப்பவர்களுக்கு இந்த வெளியீடு தபாலில் அனுப்பப்படும்.

**ரூ.504/-** அளிப்பவர்களுக்கு இதுவரை வெளிவந்த வெளியீடுகள் Pdf / Whatsapp-ல் அனுப்பப்படும்.

**ரூ.1008/-** அல்லது அதற்கு மேல் அளிப்பவர்களுக்கு சமீபத்திய மூன்று வெளியீடுகள் மற்றும் 250 சங்காரனந்த கானங்கள் ஆடியோ - Pen Drive மூலம் தபாலில் அனுப்பப்படும்.

**G-Pay No : 63 83 45 35 03**
**Whatsapp No : 99404 47 437**

நன்கொடை அளித்தவர்கள் தங்களின் முகவரி மற்றும் தொகை மேற்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தெரியப்படுத்தவும்.

- தேனுபுரீஸ்வர தாசன் இல. சங்கர்

## கருணை தெய்வம் கற்பக விருட்சம்
## காஞ்சி மஹாஸ்வாமி கானம்

(நாதர் முடி மேல் இருக்கும் நல்ல பாம்பே - மெட்டு)

வரம் வேண்டும் வரம் வேண்டும் மஹா பெரியவா - அபய
கரம் வேண்டும் வரம் வேண்டும் மஹா பெரியவா
பரம் வேண்டும் வரம் வேண்டும் மஹா பெரியவா - நெஞ்
சுரம் வேண்டும் மனம் வேண்டும் மஹா பெரியவா

வேண்டும் வரம் தந்தருளும் வேத நாதரே - என்றும்
வேண்டும் நின் பேரருளே காஞ்சி நாதரே
வேண்டும் முன் வரம் அருளும் வைத்தியநாதரே - காண
வேண்டும் நின் திருவடியே காஞ்சி நாதரே

வேண்டும் நின் கருணை என்றும் மஹா பெரியவா - நீங்க
வேண்டும் என் வறுமை மஹா பெரியவா
வேண்டும் மனம் அறிந்தருளும் மஹா பெரியவா - அருள்வீர்
வேண்டும் மனம் மாறா மனம் மஹா பெரியவா

வேண்டும் மாந்தர்க் கருள் புரியும் விஸ்வநாதரே - என்றும்
வேண்டும் சாந்த மனமெனக்கே காஞ்சி நாதரே
வேண்டும் நால் வேத வழி மஹா பெரியவா - தொடர்ந்திட
வேண்டும் தெய்வத்தின் குரல் மஹா பெரியவா



# இந்திரியங்கள் அடக்கி இகபர சுகம் அருளும் காஞ்சிகுருநாதர் கானம்

(கண்ணன் எங்கள் கண்ணனாம் - மெட்டு)

கண் கண்ட தெய்வமே காருண்ய ரூபமே
கண்களால் கவர்ந்தருளும் திருக்காஞ்சி தெய்வமே

செவி சாய்த்து குறைகேட்டு க்ஷேலாபம் அருள்பவா
செவிகளால் உன்மஹிமை தினம் கேட்போம் பெரியவா

மூச்சும் பேச்சும் உமதாக வரமருள்வீர் பெரியவா - முழு
மூச்சாக நேர் வழியில் சேர்த்தருள்வீர் பெரியவா

வாய் பெற்ற பலன் பெறவே வரமருள்வீர் பெரியவா
வாயால் உன் நாமம் உரைக்க தினமருள்வீர் பெரியவா

நெஞ்சில் நடம் ஆடிடும் நடராஜ தெய்வமே - என்
நெஞ்சில் என்றும் நிறைந்தருள்வீர் திருக்காஞ்சி தெய்வமே

கை குவித்தோர்க் கருள் குரு கைலாயத் திரு உரு
கைமேல் பலன் தந்தருளும் திருக்காஞ்சி ஜெகத்குரு

கால்கள் பெற்ற பலன் பெறவே வலம் வரஉன் சன்னதி
காலடியே பணிந்திட்டோம் காலகால சங்கரா

அங்கம் யாவும் பணிந்திட அத்வைதம் உணர்ந்திட
அஷ்டாங்கமாய் பணிந்திட அருள்புரிவீர் பெரியவா



## குறைகள் தீர்த்தருளும் குரு காஞ்சி மாமுனி கானம்

(நீ தானா எனை அழைத்தது - மெட்டு)

பிருந்தா வனம்கொண்ட மாமுனியே
வருந்தி வந்தோர்க்கருள் மாமுனியே
திருக்கரம் காணவே தீர்ந்திடும் பிணியே
அருட்கோலம் பணிந்தோம் மாமுனியே



காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள்
தபோவனம் - கோவிந்தபுரம்

பெரு வழி சேர்த்திடும் பரமனின் திருவே
ஒரு வழிப் பாதையே அருள்வீரே
திரு விழியால் வரம் தந்தருள் குருவே
இருவிழி மூடியே பணிந்தோமே

குருவாய் அமர்ந்தருள் தென்முகத் திருவே
திருக்கர அபயம் அருள்திருவே
திருவாய் மலர்ந்தருள் மும்மூர்த்தி திருவே
திருவடித் தாமரை பணிந்தோமே

திருமுகம் ஆறு கொண்டருள் திருவே
குருகுகனாய் வந்த ஸ்வாமிநாதரே
பெருவழி ஆறு உரைத்திட்ட திருவே - கச்சித்
திருமடம் பணிந்தோம் கரைசேர்ப்பீர்



# அருள்மழை பொழிந்தருளும்
# அனுஷநாத குரு கானம்

(ஸ்ரீராகம் - மெட்டு)



அத்வைத திருவே ஆதி குருவே
ஆலடி அமர்ந்தருள் ஆனந்த திருவே
இம்மை மறுமை போக்கிடும் குருவே
ஈடில்லா ஸ்வாமிநாத சங்கர குருவே

கருணா ஸாகர காருண்ய திருவே
காஞ்சியில் அமர்ந்தருள் கற்பகத் தருவே
கிட்டிட கைலாயம் வரமருள் குருவே
கீர்த்திகள் பாடியே பதம் பணிந்தோமே

சந்திர சேகர சாத்வீகத் திருவே
சாந்தமாய் அமர்ந்தருள் பூமிநாத குருவே
சிந்தையில் நிறைந்தருள் ஷண்முகத் திருவே
சீர் காஞ்சி தலம் அமர் சங்கர குருவே

நடமாடும் தெய்வமாய் நடந்திட்ட திருவே
நானிலம் நடந்திட்ட நால்வேத திருவே
நின்னடி தொடர்ந்திட நலமருள் குருவே
நீலகண்டனாய் அருள் காஞ்சி குருவே

தர்மம் தழைத்திட வந்திட்ட திருவே
தாமதிக்காதருள் தண்டபாணி திருவே
திசை எட்டும் காத்தருள் ஆள்மிக குருவே
தீதில்லா மனமருள் திருக்காஞ்சி குருவே



# சந்ததம் காத்தருளும் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி குரு கானம்

(முதாகராத்த மோதகம் - மெட்டு)

ஆதி அந்தம்அற்றவா திருக்கயிலை உறைபவா
ஆதி குரு புங்கவா ஆலடியில் அமர்ந்தவா
ஆதி குரு சங்கரா அத்வைத சங்கரா
ஆதி காஞ்சி வந்தமர்ந்த ஸ்வாமிநாத சங்கரா

விழுப்புரத்தில் பிறந்தவா விழுமிய பொருள் உணர்ந்தவா
கழு பிணியை போக்கியே காபந்து புரிபவா
எழுகதிராய் அருள்பவா என்றென்றும் அருள்பவா
முழு நிலவாய் அமர்ந்தவா முக்தியருள் சங்கரா

பழுதிலா வாழ்வருள் வான்தில்லை தாண்டவா
வாழும் வகை உணர்த்திய திருக்காஞ்சி சங்கரா
விழும் முன்னே காப்பவா விழி அசைவில் அருள்பவா
முழு நிலவாய் அமாந்தவா முக்தியருள் சங்கரா

சுழு முனையில் அருள்பவா சூழ் துன்பம் தீர்ப்பவா
பழுதிலா மனமருள் பார் போற்றும் சங்கரா
தொழுது நின்றோர்க் கருள்பவா தொல் வினையே தீர்ப்பவா
முழு நிலவாய் அமர்ந்தவா முக்தியருள் சங்கரா





# எல்லையில்லா ஆனந்தம்
# அருள்காஞ்சி குருநாதர் கானம்

(வாழ்க்கை எனும் ஓடம் - மெட்டு)

அனுஷ நாத பாஹிமாம் ஆதி குரு பாஹிமாம்
அருணேஸ்வர ரக்ஷமாம் ஸ்வாமிநாத ரக்ஷமாம்

காசியிலே அமர்ந்தருளும் விஸ்வநாத சங்கரா- பக்தர்
காசினியை தீர்த்தருளும் விஸ்வேஸ்வர சங்கரா

காஞ்சியிலே அமர்ந்தருளும் காலகால சங்கரா - சிவ
காஞ்சியிலே அமர்ந்தருளும் வரதராஜ சங்கரா

கயிலையிலே அமர்ந்தருளும் கௌரீஸ்வர சங்கரா
மயிலையிலே அமர்ந்தருளும் கற்பகாம்பா சங்கரா

காஞ்சியிலே அமர்ந்தருளும் காமகோடி சங்கரா - சிவ
காஞ்சியிலே அமர்ந்தருளும் காமாக்ஷி சங்கரா

நால் வேதமாய் அமர்ந்தருளும் நமசிவாய சங்கரா
மால் பிரம்மன் திருஉருவே ஸ்ரீ தத்த சங்கரா

வேல் கொண்டு காத்திட்ட ஸ்வாமிநாத சங்கரா - ஞான
வேல் கொண்டு காத்தருளும் பூமி நாத சங்கரா



## அனுஷத்தில் உதித்திட்ட ஆதிசங்கர குரு கானம்

(புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே - மெட்டு)

திருக் காஞ்சித் தலம் அமர்ந்த குரு சங்கரா - பக்தர்
சிறு நெஞ்சில் அமர்ந்தருளும் சிவ சங்கரா
குருஸ்வாமி நாதனாய் வந்த சங்கரா - ஜெகத்
குருவாக அமர்ந்தருளும் சிவசங்கரா

அனுஷத்தில் பிறந்திட்ட ஆதி சங்கரா - பெரு
மானுடமே காக்க வந்த குரு சங்கரா
மானுடன் மழு கொண்ட சிவ சங்கரா - காஞ்சியில்
தானுமால் அயனாயருள் குரு சங்கரா

ஷண்மதமே தந்திட்ட ஆதி சங்கரா - ஞானக்
கண் திறக்க வரம்தந்த குரு சங்கரா
வெண்ணிலா முகம் கொண்ட தவ சங்கரா - பக்தர்
எண்ணிலா குறைதீர்த்த குரு சங்கரா

நான்கு திசை நடந்திட்ட ஆதி சங்கரா - காஞ்சியின்
நால் திசையும் மடம் தந்த குரு சங்கரா
நால் வேதம் காத்திடவே வந்த சங்கரா - நித்தம்
நான்கு திசை காத்தருளும் குரு சங்கரா



# திருக்காஞ்சியில் அமர்ந்தருளும்குரு ஸ்வாமிநாத சங்கர குரு கானம்

(நாதஸ்வர ஓசையிலே - மெட்டு)

திருக் காஞ்சி மாமுனியே தீவினைகள் தீர்ப்பவரே
திருக் கயிலை தவமுனியே தீராத்துயர் தீர்ப்பவரே

ஆதி குரு சங்கரரே ஆத்ம ஞான போதகரே
ஆர்யாம்பா சிவகுருவின் மெய்ஞான புத்திரரே

ஆதி சக்தி சிவனிடமே ஜோதிர் லிங்கம் பெற்றவரே
ஆதி காஞ்சி தலம் அமர்ந்தே அருள் புரியும் வித்தகரே

ஆலடியில் அமர்ந்தருளும் தென் திசையின் நாதரே
ஆலங்காட்டில் நின்றருளும் நாட்டிய நாத சங்கரரே

ஆலங்குடி தலம் அமர்ந்த தேவ குரு நாதரே
ஆதி காஞ்சி தலம் அமர்ந்த ஆதி குரு நாதரே

ஆறுமுக வேலவனாய் வந்திட்ட பெருஞ்சுடரே
ஆறு பாதை வகுத்தளித்த ஆதி குரு சங்கரரே

ஆறுதலை தந்தருளும் குரு ஸ்வாமி நாதரே
ஆறில் ஒன்றில் அமர்ந்தருளும் முக்தீஸ்வர சங்கரரே



# அஞ்ஞான இருள் நீக்கும் அனுஷநாத சங்கர கானம்

(ராம சந்திராய ஜனக - மங்களம் - மெட்டு)


அம்பிகையின் மனம் கொண்ட மஹா பெரியவா
அம்பிகா பதி நீரே மஹா பெரியவா
அம்புலியை அணிந்தமர்ந்த மௌலீஸ்வரா - காஞ்சி
அம்பிகையின் திருஉருவே மஹா பெரியவா



நவராத்திரி வைபவத்தில் மஹா பெரியவா
நவ நிதியும் நல்கிடுவீர் மஹா பெரியவா
நவ விதமாய் பக்தி செய்ய மஹா பெரியவா
நவ துர்கையாய் தினமருள்வீர் மஹா பெரியவா

அஷ்ட லக்ஷ்மி ரூபனே மஹா பெரியவா - மன
கஷ்டங்கள் தீர்த்தருளும் மஹா பெரியவா
இஷ்ட சித்தி தந்தருளும் மஹா பெரியவா
அஷ்ட சித்தி நாயகரே மஹா பெரியவா

சப்த கன்னி ரூபனே மஹா பெரியவா - ஆதி
சுப்ரமணிய ஸ்வாமிநாத மஹா பெரியவா
எப்பிறப்பும் மறவா வரம் மஹா பெரியவா - அருள்வீர்
இப்பிறப்பில் உமை பணிந்தோம் மஹா பெரியவா



*Sri Mahaswami with Jayendra Saraswathi Swamigal in Chennai - 1957*

# அனுஷ குருநாத திருப்பாத சரண கானம்

(பாஹி ராம பிரபோ - மெட்டு)

குரு பாதம் பணிவோம் குரு பாதம் பணிவோம்
குறைகள் களையும் குரு பாதம் பணிவோம்
குரு பாத தரிசனம் நித்தியம் செய்வோம்
குன்றுரு வினைகள் கரைவதை உணர்வோம்



ஆதி சிவ பாதமே நடனேசன் பாதமே
ஆதி குரு பாதமே குரு மூர்த்தி பாதமே
ஆதி சங்கரரின் அற்புதப் பாதமே
ஆதி திருக் காஞ்சியில் அமர்ந்தருள் பாதமே

சுந்தரரை ஆட்கொண்ட சங்கர பாதமே
வாதவூரர்க் கருளிய ஒப்பற்ற பாதமே
மும்முறை வலம் வந்த ஷண்மத பாதமே
முக்தியருள் காஞ்சியில் அமர்ந்தருள் பாதமே

கொம்பிடை நடமிடும் நஞ்சுண்டோன் பாதமே
நம்பியோர்க் கருளும் நம்குரு பாதமே
அம்பிகையாய் அருளும் குஞ்சித பாதமே
நடமாடும் தெய்வமாய் நமைகாக்கும் பாதமே



# காந்தமாய் ஈர்த்தருளும் காஞ்சி குரு கானம்

(அன்பில் மலர்ந்த நல் ரோஜா - மெட்டு)



ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமியே
ஸ்ரீ சந்திர சேகர குரு ஸ்வாமியே
ஸ்ரீ தத்தரூபரே தக்ஷிணாமூர்த்தியே
ஸ்ரீ சந்திர சேகர குரு ஸ்வாமியே

அண்டங்கள் காத்திடும் ஆதவா
அண்டி நின்றோர்க் கருள் மாதவா
அன்போ டருள்பவா ஆடியே நின்றவா
அடி பணிந்தோர்க் கருள் பெரியவா

அருள் பொங்கும் விழியாலருள் பெரியவா
அருஉரு சிவமே ஆண்டவா
அருவியாய் வரமருள் ஆனந்த தாண்டவா
அடி பணிந்தோர்க் கருள் பெரியவா

அஞ்சியே வந்தோர்துயர் தீர்த்தவா
அஞ்சோடெட்டும் உரைத்திட்டவா
அஞ்ஞான இருள்தனை போக்கிய புங்கவா
அடி பணிந்தோர்க் கருள் பெரியவா


**ஸ்ரீ மஹா பெரியவா கோசாலை**

டெல்லஸ் அவென்யு Phase 2, ராஜகீழ்பாக்கம், சென்னை - 600 073.





மஹா பெரியவா பெருங்கருணையுடன் தனிச்சன்னதி கொண்டு அருள்பாலிக்கும் இக்கோசாலையில் 50க்கும் மேற்பட்ட பசுக்கள் பாரம்பரிய முறைப்படி பராமரிக்கப்படுகிறது. மஹா பெரியவாளின் பக்தர்கள் கோசம்ரக்ஷணத்திற்கு தங்களால் இயன்ற காணிக்கைகளை மாதந்தோறும் அளித்து கோமாதாவின் அருளையும் மஹாஸ்வாமிகளின் ஆசிகளையும் பெறலாம்.

தொடர்புக்கு : **திரு. ராமச்சந்திரன் Cell : 94440 42055**

**SRI MAHA PERIYAVA GOSALAI**

**SB A/C No. 500101013084353 IFSC CODE : CIUB0000286**
**CITY UNION BANK, RAJAKILPAKKAM BRANCH**

# ஆலடி சங்கர காலடி சங்கர கலவை சங்கர காஞ்சி மஹாஸ்வாமி கானம்

(பிருந்தாவனமும் நந்தகுமாரனும் - மெட்டு)



அனுஷத்தில் பிறந்திட்ட ஆலடி குருவே
அனுக்கிரஹம் புரிந்திடும் ஜெகத் குருவே
அனுஷத்தில் உதித்திட்ட சங்கர திருவே
அனுதினம் பணிந்திட அருள்வீரே

பூபாளம் பாடியே பதம் பணிந்தோமே
பூலோகம் காத்திடும் புவனேஸ்வரா
பூலோகம் மேல் லோகம் போற்றிடும் பரமே
பூப்பாதம் பணிந்தோம் மஹா ஸ்வாமி

பூவிரல் நிழலால் பூலோகம் காத்திடும்
பூவன நாதனே நடனேஸா
பூரண சந்திர முகம் கொண்டவரே
பூப்பாதம் பணிந்தோம் மஹா ஸ்வாமி

பூ விழி மலர்ந்தருள் புண்ணிய திருவே
பூலோக குருவே மஹா ஸ்வாமி
பூந்தளிர் கரங்களால் அபயம் அருள்வீர்
பூப்பாதம் பணிந்தோம் மஹா ஸ்வாமி



# அத்வைத குருவிற்கோர் மங்கள ஆரத்தி கானம்

(ஜெய் ஜெகதீஷ் ஹரே - மெட்டு)

ஆரத்திஏற்றருள்வீர் - மங்கள
ஆரத்திஏற்றருள்வீர்
ஹரஹரசங்கர ஜெயஜெய சங்கர
ஆரத்திஏற்றருள்வீர் - எங்கள்
காஞ்சிசங்கரரே



அனுஷத்தில் பிறந்திட்டஆதிசங்கரா
அனுகிரஹம் புரிந்தருள்வீர்
அனுதினம் உன் பதம் பணிந்திடஅருள்வீர்
அனுபவம் தினமருள்வீர் - ஆனந்த
அனுபவம் தினமருள்வீர்

ஆதியில் காலடிபிறந்திட்டசிவமே
ஆதிசங்கரரே
ஆன்மிகவழிகள் ஆறு தந்திட்ட
ஆதிசங்கரரே - எங்கள்
காஞ்சிசங்கரரே



ஆலடிஅமர்ந்தருள் ஆதிசங்கரா
ஆனந்ததவத்திருவே
ஆதிகலவையில் குருவாய் அமர்ந்தீர்
ஆசிகள் நல்கிடவே - எங்கள்
காஞ்சிசங்கரரே

ஆதிசிவனின் நெற்றிக் கண் சுடரே
ஆறுமுக ஸ்வாமிநாதரே
ஆறாத் துயர் தீர்த் தருள்குருநாதரே
ஆதி ஸ்வாமிநாதரே - எங்கள்
காஞ்சிசங்கரரே



ஜெயமருள் குருவே ஸ்ரீ ஜெகத்குருவே
ஜெயேந்திர குரு பரரே
விஜயம் செய்திட்ட ஸ்ரீ விஸ்வநாதரே
விஜயீந்திர குரு பரரே - எங்கள்
காஞ்சிசங்கரரே




## சங்கரானந்தம்

இது வரை சற்றேறக்குறைய 1000 பாடல்களுக்கு மேல் எழுத வைத்துள்ள காஞ்சி மஹாஸ்வாமி, 19 சங்கரானந்த தொகுப்புகளை மஹா பெரியவாளின் பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக 2,00,000 பிரதிகளுக்கு மேல் வழங்கி அடியேனை அகமகிழச் செய்துள்ளார். மஹா பெரியவாளின் அத்யந்த பக்தர்களின் பொருளுதவியால் இப்பெரும் புண்ணிய குரு கைங்கர்யம் அமோகமாக நடைபெற்றுக்கொண்டுள்ளது. அடுத்து சங்கரானந்தம் - தொகுப்பு 22 வெளிவர தங்களால் இயன்ற பொருளுதவி செய்து குரு கைங்கர்யத்தில் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஊர் கூடி தேர் இழுத்தல் போல
பலர் கூடி மஹாபெரியவாளின் மஹிமைகளை போற்றும் சங்கரானந்த தேரை
மலர் தூவி வரவேற்று அனைவரது இல்லத்திலும் சேர்த்து
பலர் மனமகிழ்ந்து அகம்குளிரச் செய்வோம் வாரீர். . .

என்றென்றும் குரு கைங்கர்யத்தில் திளைத்து , திருப்பாதம் பணிந்து

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர், 99404 47 437.**

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
# ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள்
# அஷ்டோத்திர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி குருப்யோ நம:
ஓம் ஸன்யாஸாஸ்ரம சிகராய நம:
ஓம் காஷாய தண்ட தாரிணே நம:
ஓம் ஸர்வபீடாபஹாரிணே நம:
ஓம் ஸ்வாமிநாத குரவே நம:
ஓம் கருணாஸாகராய நம:
ஓம் ஜகதாகர்ஷண சக்திமதே நம:
ஓம் ஸர்வ சராசர ஹ்ருதயஸ்தாய நம:
ஓம் பக்த பரிபாலக ஸ்ரேஷ்டாய நம:
ஓம் தர்ம பரிபாலகாய நம:
ஓம் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வத்யாசார்யாய நம:
ஓம் ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி பூஜிதாய நம:
ஓம் சிவ சக்தி ஸ்வரூபகாய நம:
ஓம் பக்த ஜன ப்ரியாய நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவைக்யஸ்வரூபாய நம:



ஓம் காஞ்சீ க்ஷேத்ர வாஸாய நம:
ஓம் கைலாஸ சிகர வாஸாய நம:
ஓம் ஸ்வதர்ம பரிபோஷகாய நம:
ஓம் சாதுர் வர்ண்ய சம்ரக்ஷகாய நம:
ஓம் லோக ரக்ஷண ஸங்கல்பாய நம:
ஓம் ப்ரஹ்ம நிஷ்டாபராய நம:
ஓம் ஸர்வ பாப ஹராய நம:
ஓம் தர்ம ரக்ஷண ஸந்துஷ்டாய நம:
ஓம் பக்தார்ப்பித தன ஸ்வீகர்த்ரே நம:
ஓம் ஸர்வோபநிஷத் ஸாரஞ்ஞாய நம:
ஓம் ஸர்வ சாஸ்த்ர கம்யாய நம:
ஓம் ஸர்வ லோக பிதாமஹாய நம:
ஓம் பக்தாபீஷ்ட ப்ரதாயகாய நம:
ஓம் ப்ரம்மண்ய போஷகாய நம:
ஓம் நானாவித புஷ்பார்ச்சித பதாய நம:
ஓம் ருத்ராக்ஷ கிரிட தாரிணே நம:
ஓம் பஸ்மோத் தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸர்வ சராசர வ்யாபகாய நம:
ஓம் அநேக சிஷ்ய பரிபாலகாய நம:
ஓம் மனஸ் சாஞ்சல்ய நிவர்த்தகாய நம:



ஓம் அபய ஹஸ்தாய நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் யக்ஞ புருஷாய நம:
ஓம் யக்ஞாநுஷ்டான ருசிப்ரதாய நம:
ஓம் யக்ஞ ஸம்பன்னாய நம:
ஓம் யக்ஞ ஸஹாயகாய நம:
ஓம் யக்ஞ பலதாய நம:
ஓம் யக்ஞ ப்ரியாய நம:
ஓம் உபமான ரஹிதாய நம:
ஓம் ஸ்படிக துளஸீ ருத்ராக்ஷ ஹார தாரிணே நம:
ஓம் சாதுர்வர்ண்ய ஸமத்ருஷ்டயே நம:
ஓம் ருக் யஜுஸ் ஸாமாதர்வண சதுர்வேத ஸம்ரக்ஷகாய நம:
ஓம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபாய நம:
ஓம் ஜாக்ர ஸ்வப்ன ஸுஷுப்தயவஸ்தாதீதாய நம:
ஓம் கோடி ஸுர்யதுல்ய தேஜோமய சரீராய நம:
ஓம் ஸாதுஸங்க ஸம்ரக்ஷகாய நம:
ஓம் அச்வகஜ கோ பூஜா நிர்வர்த்தகாய நம:
ஓம் குருபாதுகா பூஜா துரந்தராய நம:
ஓம் கனகாபிஷிக்தாய நம:
ஓம் ஸ்வர்ண வில்வதள பூஜிதாய நம:
ஓம் ஸர்வ ஜீவ மோக்ஷதாய நம:
ஓம் மூகவாக்தான நிபுணாய நம:
ஓம் நேத்ர தீக்ஷாதானாய நம:
ஓம் த்வாதச லிங்க ஸ்தாபகாய நம:
ஓம் கான ரஸஞ்ஞாய நம:
ஓம் ப்ரஹ்ம ஞானோபதேசகாய நம:
ஓம் ஸகல கலா ஸித்திதாய நம:
ஓம் சாதுவர்ண்ய பூஜிதாய நம:
ஓம் அநேகபாஷா ஸம்பாஷண கோவிதாய நம:
ஓம் அஷ்ட ஸித்திப்ரதாயகாய நம:
ஓம் ஸ்ரீ சாரதா மட ஸுஸ்திதாய நம:
ஓம் நித்தியான்னதான ஸுப்ரீதாய நம:
ஓம் ப்ரார்த்தனாமாத்ர ஸுலபாய நம:
ஓம் பாதயாத்ரா ப்ரியாய நம:
ஓம் நானாவிதமத பண்டிதாய நம:
ஓம் சுருதி ஸ்ம்ருதி புராணஞ்ஞாய நம:
ஓம் தேவ யக்ஷ கின்னர கிம்புருஷ பூஜ்யாய நம:
ஓம் ஸ்ரவணானந்தகர கீர்த்யே நம:
ஓம் தர்சனானந்தாய நம:
ஓம் அத்வைதானந்த பரிதாய நம:
ஓம் அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:



ஓம் சைவ வைஷ்ணவாதி மான்யாய நம:
ஓம் சங்கராசார்யாய நம:
ஓம் தண்ட கமண்டலு ஹஸ்தாய நம:
ஓம் வீணாம்ருதங்காதி ஸகலவாத்யநாத ஸ்வரூபாய நம:
ஓம் ராமகதா ரஸிகாய நம:
ஓம் வேத வேதாங்க ஆகமாதி ஸகல கலா ஸதஸ் ப்ரவர்தகாய நம:
ஓம் ஹ்ருதய குஹாசயாய நம:
ஓம் சதருத்ரீய வர்ணித ஸ்வரூபாய நம:
ஓம் கேதாரேஸ்வர நாதாய நம:
ஓம் அவித்யா நாசகாய நம:
ஓம் நிஷ்காம கர்மோபதேசகாய நம:
ஓம் லகுபக்திமார்கோபதேசகாய நம:
ஓம் லிங்கஸ்வரூபாய நம:
ஓம் ஸாலக்ராம ஸூக்ஷ்மஸ்வரூபாய நம:
ஓம் காலட்யாம் சங்கர கீர்த்திஸ்தம்ப நிர்மாண கர்த்ரே நம:
ஓம் ஜிதேந்த்ரியாய நம:
ஓம் சரணாகதவத்ஸலாய நம:
ஓம் ஸ்ரீ சைல சிகரவாஸாய நம:
ஓம் டமருகநாத விநோதனாய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் துர்மதநாசகாய நம:
ஓம் ஆபிசாரிகதோஷஹர்த்ரே நம:
ஓம் மிதாஹாராய நம:
ஓம் ம்ருத்யுவிமோசன சக்தாய நம:
ஓம் ஸ்ரீ சக்ரார்ச்சன தத்பராய நம:
ஓம் தாஸானுக்ரஹ காரகாய நம:
ஓம் அனுராதா நக்ஷத்ர ஜாதாய நம:
ஓம் ஸர்வலோக க்யாத சீலாய நம:
ஓம் வேங்கடேஸ்வர சரணபத்மஷ்டபதாய நம:
ஓம் ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திமௌளீஸ்வர பூஜாப்ரியாய நம:



இதி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஜெகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி அஷ்டோத்திர சத நாமாவளி சம்பூர்ணம்.







பாதக மலங்களை போக்கும்
பாத கமலங்களை பணிவோம்



அத்வைத குருவின் அதிகாலை விஸ்வரூப தரிஸனம்